V12His

விருதுநகர் மாவட்டம்
முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

-----

வகுப்பு 12

காலஅளவு: 3.00 மணிநேரம் **வரலாறு** மதிப்பெண்கள்: 90

பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **20×1=20**

1) பின்வரும் நிகழ்வுகளைச் சரியான காலவரிசைப்படி, அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்
i) கேதா சத்தியாகிரகம் ii) சம்பரான் இயக்கம்
iii) பிராமணரல்லாத இயக்கம் iv) வேதாரண்யம் உப்புச்சத்தியாகிரகம்
அ) (ii), (iii), (i), (iv) ஆ) (iii), (ii), (i), (iv) இ) (ii), (i), (iv), (iii) ஈ) (ii), (i), (iii), (iv)

2) டாக்டர் அன்னிபெசண்ட் ........... நாட்டைச் சார்ந்தவர்
அ) நெதர்லாந்து ஆ) ஸ்காட்லாந்து இ) அயர்லாந்து ஈ) பின்லாந்து

3) இந்தியாவில் ஆங்கிலக்கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855

4) இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர்
அ) சுரேந்திரநாத் பானர்ஜி ஆ) பத்ருதீன் தியாப்ஜி
இ) A.O.ஹியூம் ஈ) W.C.பானர்ஜி

5) பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?
அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன்மோகன் மாளவியா
இ) திலகர் ஈ) பி.பி.வாடியா

6) "Indian Unrest' என்ற புத்தகத்தின் ஆசிரியர்
அ) லாலா லஜபதிராய் ஆ) வேலண்டைன் சிரோல்
இ) திலகர் ஈ) அன்னிபெசண்ட்

7) காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) W.C.பானர்ஜி ஈ) M.G.ரானடே

8) காந்தியடிகளின் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு
அ) ஏப்ரல் 6, 1930 ஆ) மார்ச் 6, 1930 இ ஏப்ரல் 4, 1939 ஈ) மார்ச் 4, 1930

9) கல்பனா தத் எதனுடன் தொடர்புடையவர்?
அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிப்பிளிகன் அசோசியேஷன்
ஆ) வங்காள சபை
இ) இந்தியக் குடியரசு இராணுவம்
ஈ) இவற்றில் எதுவுமில்லை

10) முதலாவது பயணிகள் இரயில் 1853-இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
அ) மதராஸ் - அரக்கோணம் ஆ) பம்பாய் - பூனா
இ) பம்பாய் - தானே ஈ) கொல்கத்தா - ஹூக்ளி

11) பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்?
அ) எம்.என்.ராய் ஆ) பகத்சிங்
இ) எஸ்.ஏ. டாங்கே ஈ) ராம்பிரசாத் பிஸ்மில்

12) 1937-இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது
அ) 12 மாகாணங்கள் ஆ) 7 மாகாணங்கள் இ) 5 மாகாணங்கள் ஈ) 8 மாகாணங்கள்

13) பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| அ) அன்னிபெசண்ட் | - 1. அலிகார் இயக்கம் |
| ஆ) சையது அகமது கான் | - 2. தயானந்த சரஸ்வதி |
| இ) கிலாபத் இயக்கம் | - 3. பிரம்மஞான சபை |
| ஈ) சுத்தி இயக்கம் | - 4. அலி சகோதரர்கள் |

அ) 3 1 4 2
ஆ) 1 2 3 4
இ) 4 3 2 1
ஈ) 2 3 4 1

14) கிரிப்ஸ் தூதுக்குழு யாருடைய ஆட்சியின் போது இந்தியாவிற்கு வருகை தந்தது?
அ) வேவல் பிரபு ஆ) லின்லித்தோ பிரபு
இ) மௌண்ட் பேட்டன் பிரபு ஈ) இவர்களில் யாருமில்லை

15) மகாத்மா காந்தியடிகளின் 'செய் அல்லது செத்துமடி' என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்?
அ) சட்டமறுப்பு இயக்கம் ஆ) ஒத்துழையாமை இயக்கம்
இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) இவை அனைத்தும்

16) பிரிட்டிஷார் எந்தக் காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்தனர்?
அ) ஆகஸ்ட் 15, 1947 ஆ) ஜனவரி 26, 1950
இ) ஜூன், 1948 ஈ) டிசம்பர் 1949

17) மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

18) மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள்
அ) ஜனவரி 30, 1948 ஆ) ஆகஸ்ட் 15, 1947
இ) ஜனவரி 30, 1949 ஈ) அக்டோபர் 2, 1948

19) பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர் லால் பகுகுணா

20) இந்திய அரசியலமைப்பின் முதலாவது திருத்தம் எப்போது மேற்கொள்ளப்பட்டது?
அ) 1951 ஆ) 1952 இ) 1976 ஈ) 1978

## பகுதி - II

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா எண்: 30)** **7×2=14**

21) தேசியம் என்றால் என்ன?
22) இந்திய தேசிய காங்கிரசுக்கு முன்னர் தொடங்கப்பட்ட அமைப்புகளின் பட்டியலை தயார் செய்க
23) மகாதேவ் கோவிந்த் ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார்?
24) கிலாபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?
25) காந்தியடிகளின் சம்பரான் சத்தியாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யாவர்?
26) பி.ஆர்.அம்பேத்கரால் வழி நடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் பற்றி அறிவது என்ன?
27) புகழ்பெற்ற கோரக்பூர் நீதிபதியான HE ஹோம்ஸ் பற்றி நீவிர் அறிவது யாது?
28) தனித்தொகுதி முறையினை பற்றி எழுதுக
29) இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது?
30) நிதி ஆயோக் என்ற அமைப்பு பற்றி கூறுக.

## பகுதி - III

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா எண்: 40)** **7×3=21**

31) மெக்காலேயின் 'இந்தியக்கல்வி குறித்த குறிப்புகளை' ஆய்க
32) கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
33) தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்
34) ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக
35) டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் பற்றி குறிப்பு எழுதுக
36) 1909 ஆம் ஆண்டின் மின்டோ-மார்லி சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் கூறுக
37) பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.
38) குத்தகை சீர்திருத்தங்களின் நோக்கங்கள் யாவை?
39) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காத அமைப்புளின் பெயரை எழுதுக
40) உதம்சிங் பற்றி குறிப்பு வரைக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி.** **7×5=35**

41) அ) இந்திய தேசிய காங்கிரஸின் நோக்கங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆரம்ப கால தேசியவாதிகள் அளித்த பங்கினையும் விளக்குக. **(அல்லது)**
ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக

42) அ) ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து சட்டமறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டிருந்தது? **(அல்லது)**
ஆ) ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?

43) அ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும். **(அல்லது)**
ஆ) 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளைக் கண்டறிக.

44) அ) முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடு. **(அல்லது)**
ஆ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக

45) அ) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க **(அல்லது)**
ஆ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக

46) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஆய்க. **(அல்லது)**
ஆ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் 1947ஆம் ஆண்டு இந்தியபாகிஸ்தான் எல்லைகளை வரைந்து கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்**
i) ஜம்மு காஷ்மீர் ii) ஜீனாகத் iii) ஹைதராபாத்

47) அ) 1919-1939 ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக **(அல்லது)**
ஆ) கி.பி. 1920 முதல் கி.பி 1950 வரையிலான காலக்கோடு வரைந்து இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிக்கவும்.

- - - - - - -